# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:59** **தேதி:-25.08.2015**

## அகில இந்திய சங்க மையக்கூட்ட முடிவுகளும், ப்ராட் பேண்ட் தொடர்பாக JAC கடிதமும்

அன்பார்ந்த தோழர்களே,

நமது அகில் இந்திய சங்கத்தின் மையக்கூட்டம் 25.08.2015 அன்று டெல்லியில் நடைபெற்றது. அதில் கீழ்கண்ட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன:-

**கவுன்சில் உறுப்பினர்கள்:-** கேரள உயர் நீதிமன்ற உத்தரவின் காரணமாக நம்மால் நமது கூட்டணி சங்க உறுப்பினர்களை கவுன்சில் உறுப்பினர்களாக நியமிக்க இயலவில்லை. BSNL ஊழியர் சங்கத்தின் கடுமையான முயற்சிகளுக்கு பின்னரும் நீதிமன்றத்தில் இருந்து சாதகமான முடிவுகளை பெற முடியவில்லை. இந்த சூழ்நிலையில் நமது கூட்டணி சங்க உறுப்பினர்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த கவுன்சில் உறுப்பினர்கள் இடங்களை BSNL ஊழியர் சங்க உறுப்பினர்களை கொண்டு நிரப்ப அகில இந்திய சங்கத்தின் மையக் கூட்டம் முடிவு செய்துள்ளது. எனவே மாவட்ட செயலாளர்கள் தலமட்ட கவுன்சில்களுக்கான முன்மொழிவுகளை மாநில சங்கத்தின் மூலம் மத்திய சங்கத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.

**தேசிய கவுன்சில் உறுப்பினர்கள்:-** மேலே சொன்ன முடிவுகளின் அடிப்படையில் தேசிய கவுன்சில் உறுப்பினர்களாக கீழ் கண்ட தோழர்களை நியமிக்க அகில இந்திய சங்கத்தின் மையக்கூட்டம் முடிவு செய்துள்ளது:-

1) தோழர் P.அசோகா பாபு, துணைத் தலைவர் (CHQ)
2) தோழர் சைபால் சென்குப்தா பொருளாளர் (CHQ)
3) தோழர் R.K.மிஷ்ரா, மாநில செயலாளர் UP(East)
4) தோழர் அசோக் பரீக் மாநில செயலாளர் ராஜஸ்தான்.

**பொது செயலாளர் விடுப்பு:-** நமது அகில இந்திய பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் சொந்த காரணங்களுக்காக 04.09.2015 முதல் 20.09.2015 வரை விடுப்பில் செல்ல இருப்பதால் இந்த காலத்தில் நமது துணை பொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி அவர்கள் பொறுப்பு பொது செயலாளராக பணியாற்றுவார்.

**ப்ராட் பேண்ட் சேவைகளின் தரத்தை உயர்த்த JACயின் ஆலோசனை:-**
ப்ராட் பேண்ட் இணைப்புகளை வழங்குவது மற்றும் பராமரிப்பது ஆகிய பணிகளை தனியாருக்கு தரும் நிர்வாகக் குழுவின் ஆலோசனைகளை BSNL ஊழியர் சங்கம் கடுமையாக எதிர்த்து வந்தது. JACயில் உள்ள பிற சங்கங்களுடன் சேர்ந்து நிர்வாகத்துடன் இரண்டு முறை பேச்சு வார்த்தை நடைபெற்றது. இந்தக் கூட்டங்களில் ப்ராட் பேண்ட் சேவைகளின் தரத்தை உயர்த்த தனியாருக்கு வழங்குவது அவசியம் என்பதை நிர்வாகத்தால் நிரூபிக்க முடியவில்லை. இதன் தொடர்ச்சியாக ப்ராட்பேண்ட் சேவைகளின் தரத்தை உயர்த்த கீழ்கண்ட ஆலோசனைகளை CMD BSNLக்கு JAC வழங்கியுள்ளது:-

1) ப்ராட்பேண்ட் சேவைகளின் தரத்தை உயர்த்துவதற்கு கேபிள் பழுதுகள்தான் தடையாக உள்ளது. எனவே BSNL நிர்வாகம் பழுதற்ற கேபிள் வலைத்தளத்தை உருவாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
2) அலுவலக நேரத்திற்கு பின்பும், விடுமுறை நாட்களிலும், ப்ராட் பேண்ட் பழுதுகளை சரி செய்ய 'அர்ப்பணிப்பு உணர்வுடன் கூடிய குழு' ஒன்றை அமைக்க வேண்டும். கடந்த காலத்தில் இருந்ததை போல ஷிப்ட் டூட்டி மற்றும் அழைக்கும் போது வரக்கூடிய CALL DUTYக்களை உருவாக்குவதை கூட நிர்வாகம் பரிசீலிக்கலாம்.
3) ப்ராட்பேண்ட் சேவைகளில் அவ்வப்போது அறிமுகப்படுத்தப்படுகின்ற புதிய தொழில் நுட்பங்களை கையாளக்கூடிய வகையில் RM, TM, TTAக்களுக்கு 'INSERVICE TRAINING' வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
4) ப்ராட்பேண்ட் பழுதுகளை உடனடியாக சரி செய்ய லைன்ஸ்டாப்களுக்கு தேவையான பொருட்களையும், உபகரணங்களையும் தலமட்டத்தில் கிடைப்பதை நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும்.
5) புதியதாக உருவாகி வருகின்ற அடுக்கு மாடி குடியிருப்புகள் மற்றும் காலனிகளில் இருக்கும் சந்தாதாரர்களுக்கு உடனடியாக ப்ராட் பேண்ட் சேவைகளை வழங்குவதற்கு உடனடியாக புதிய கேபிள்களை பதிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

**33ஆவது தேசிய கவுன்சில் கூட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள கூடுதல் பிரச்சனைகள்:-**

33 ஆவது தேசிய கவுன்சில் கூட்டத்தில் விவாதிப்பதற்காக Sr.TOA(G), TM மற்றும் TTA கேடர்களுக்கு விருப்ப மாற்றல்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்குவது, ஊழியர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு அலவன்ஸ்களை மாற்றியமைப்பது, தேசிய கவுன்சில் மற்றும் நிலைக்குழுக்களில் வழங்கப்பட்ட பல்வேறு உறுதி மொழிகளை அமுலாக்குவது மற்றும் விடுபட்ட ஊழியர் கேடர்களுக்கான பெயர் மாற்றம் செய்வது ஆகிய நான்கு புதிய பிரச்சனைகளை ஊழியர் தரப்பின் சார்பாக வழங்கப்பட்டுள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**